# கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவனம் 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

**கற்கை நெறிக் கட்டணம்**

(i) அட்டுறு அடிப்படையில் கற்கை நெறிக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்படாது கற்கை நெறியினை நடாத்துவதற்கு ஏற்பட்ட செலவுகளுக்குச் சமமான பெறுமதியாகிய ரூபா 1,272,090 தொகை வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அவ்வாறு செலவுக்கு மிகையாகக் கிடைத்த கற்கை நெறிக் கட்டணங்கள் ‘‘அடுத்து வரும் காலத்திற்காக கிடைத்த வருமானம்’’ ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ii) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவடைந்திருந்த 03 கற்கைநெறிகள் தொடர்பாக அறவிடப்பட்ட கற்கை நெறிக் கட்டணங்களிலிருந்து மிகுதியாகவுள்ள ரூபா 106,145 தொகை ஆண்டிற்கான வருமானத்திற்குச் செலவுவைப்பதற்குப் பதிலாக ‘‘அடுத்து வரும் காலத்திற்காக கிடைத்த வருமானமாக’’ கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளச் செலுத்த வேண்டிய நூல் நிலைய வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 227,500 ஆக இருந்த போதிலும் துணைப் பதிவேட்டின் மீதி ரூபா 247,500 ஆக இருந்ததனால் அந்த மீதிகளுக்கிடையே ரூபா 20,000 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1999 இன் 01 ஆம் இலக்க தேசிய நூல் நிலைய மற்றும் தகவல் விஞ்ஞான கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு | ஒரு ஆண்டின் பொது 10 சந்தர்ப்பங்களிற்கு குறையாமல் விஞ்ஞானக் குழுக் கூட்டங்கள் நடைபெற வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 05 விஞ்ஞான குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி 135 | நிதிக்கட்டுப்பாடுகள் சம்பந்தமான செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நி.பி 371(2) | நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் முதலியவற்றின் செலவுகளை மேற்கொள்வதற்காக ரூபா 20,000 இலிருந்து ரூபா 171,500 வரை 04 சந்தர்ப்பங்களின் போது முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| | (iii) நி.பி 396 | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலம் கடந்த ரூபா 7,320 பெறுமதியான 06 காசோலைகள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) நி.பி 570 மற்றும் 571 | 2004 இற்கும் 2010 இற்கும் இடைப்பட்ட காலத்தின் போது கற்கை நெறிகளைக் கற்று முடிந்த 45 மாணவர்களிடமிருந்து நூல் நிலைய வைப்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 112,500 தொகையினை உரிய மாணவர்களுக்குச் செலுத்துவதற்கு அல்லது தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களுக்காக பொது படிவம் 287 இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

(i) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிறுவனத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்கத்தின் மானியம் மற்றும் வருமான செலவு கணக்கிற்கு பிழையாகச் செலவு வைக்கப்பட்ட ரூபா 80,500 தொகையான மூலதன மானியம் என்பவற்றை கணக்கு வைப்பதற்கு முன்னர் ரூபா 9,086,796 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 8,430,218 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா

7,674,573 தொகையான அரசாங்க மானியத்தினதும் ரூபா 80,500 தொகையான மேலே கூறப்பட்ட பிழையான செம்மையாக்கலினதும் காரணமாக அப்பாற்றாக்குறை ரூபா 1,331,723 வரை குறைவடைந்திருந்தது. கடந்த ஆண்டில் மீண்டுவரும் செலவுகளுக்காகக் கிடைத்த ரூபா 5,855,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா 2,575,218 வரை குறைவடைந்திருந்தது. அரசாங்கத்தின் மானியம் அதிகரித்தல் மற்றும் நிலையான சொத்துக்களுக்காக ஆண்டிற்கான பெறுமானத் தேய்வின் அளவு 36% ஆல் குறைவடைதல் என்பவற்றின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை குறைவடைந்திருந்தது.

(ii) 1999 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிறுவனத்திற்காக உலக வங்கி செயற்திட்டத்தின் மூலம் ரூபா 23,132,739 தொகையும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அரசாங்கத்தின் மூலதன மானியம் ரூபா 4,244,585 தொகையும் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து வருடாந்தம் உருவாகிய பற்றாக்குறையின் காரணமாக பொது ஒதுக்க கணக்கில் ரூபா 24,446,826 தொகையான வரவு மீதி ஒன்று உருவாகியிருந்தது. நிறுவனத்தினை கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளினை வெற்றிகரமாக அடைந்து கொள்ளாமையின் காரணமாக இந்த நிலை உருவாகியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலக வங்கியின் இரண்டாவது பொதுக் கல்விசெயற்திட்ட உதவியின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய நூல் நிலைய மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவனத்தின் அடிப்படைக் குறிக்கோளானது வருடாந்தம் 300 இற்கும் 400 இற்கும் இடைப்பட்ட மாணவர்களைப் பயிற்றுவிப்பதாக இருந்த போதிலும் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான 09 ஆண்டுகளின் போது 63 கற்கை நெறிகளின் கீழ் பதிவுசெய்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 1,451 மாத்திரமாக இருந்தது. அதிலும் இது வரை பூர்த்தியடையாத 09 கற்கை நெறிகளைத் தவிர்த்து மிகுதியாக உள்ள 629 மாணவர்களின் கற்கை நெறிகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அது பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கையில் 46% ஆக இருந்தது.

| ஆண்டு | கற்கைநெறிகளின் எண்ணிக்கை | பதிவுசெய்து கொண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை | கற்கை நெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவர்கள் | |
|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | சதவீதம் % |
| 2004-12-31 வரை | 09 | 344 | 201 | 58 |
| 2005 | 08 | 191 | 80 | 42 |
| 2006 | 06 | 133 | 70 | 53 |
| 2007 | 10 | 215 | 96 | 45 |
| 2008 | 06 | 178 | 114 | 64 |
| 2009 | 09 | 215 | 114 | 53 |
| 2010 | 05 | 60 | 32 | 53 |
| | 03 | 32 | கற்கை நெறி முடிவடைந்துள்ளது | - |
| 2011 | 01 | 10 | 10 | 100 |
| | 06 | 73 | கற்கைநெறி முடிவடையவில்லை | - |
| | 63 | 1451 | 717 | |

(ஆ) 1999 இன் 01 ஆம் இலக்க தேசிய நூல் நிலைய மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவன கட்டளைச் சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தினை தோற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பின்வரும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.

- நூல் நிலையம் மற்றும் தகவல் கல்வி தொடர்பாக ஆராய்ச்சி செய்தல்.
- நிறுவனத்தின் குறிக்கோள்களுக்குச் சமமாக அல்லது நியாயமான அளவுக்கு சமமான குறிக்கோள்களைக் கொண்ட இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழக நிறுவனங்களுடன் விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களை பரஸ்பரம் மாற்றம் செய்தல் அல்லது வேறுவழிகளில் ஒத்துழைப்புடன் செயற்படல்.
- உயர் புலமைப்பரிசில், புலமைப்பரிசில் உதவிப்பணம், பொது ஒப்புதல் உதவி புலமைப்பரிசில் பதக்கம் மற்றும் ஏனைய பரிசுகளை உருவாக்குதலும் வழங்குதலும்.

(இ) 2011 ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் செற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.

I. பிரயோக தகல் முகாமைத்துவ கலைமுதுமானி கற்கைநெறி (புதியது) (MAIM)

II. தகவல் முகாமைத்துவ டிப்ளோமா (புதியது) (DIM)

III. வெளிநாட்டு உதவி நிகழ்ச்சித்திட்டங்கள்

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

### 3.2.1 கற்கை நெறிகளை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூன்று விரிவுரையாளர் பதவிகளில் ஒரு பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) 03 கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட காலத்தினை விட 04 மாதங்களும் 05 மாதங்களும் தாமதமடைந்திருந்தன.

(இ) கற்கை நெறி பாதீட்டினை உரிய வேளைக்குத் தயாரிக்காமை மற்றும் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகளுக்கிடையே காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க அளவான முரண்களின் காரணமாக அந்த பாதீடு கட்டுப்பாடுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கற்கை நெறி கட்டண வருமானப் பதிவேடு உரிய மேற்பார்வையுடன் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 நூல் நிலைய பராமரிப்பும் கட்டுப்பாடும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொளளப்படுகின்றன.

(அ) நூல் நிலையத்திற்கு புத்தங்களை கொள்வனவு செய்வதில் முறையான நடைமுறை இல்லாமை.

(ஆ) நூல் நிலையத்தினைப் பயன்படுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்ததன் காரணமாக 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 6,947,597 தொகையான புத்தகங்களும் உபகரணங்களும் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது.

(இ) பதவியணியினரில் 06 உத்தியோகத்தர்களுக்கு 03-14 புத்தகங்கள் ஒரு தடவையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றினை மீள ஒப்படைக்கும் காலம் 01 மாதத்திலிருந்து 02 ஆண்டுகள் 05 மாதங்கள் வரையாக இருந்தது.

(ஈ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் காணாமல் போன 115 புத்தகங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 இருப்புக் கட்டுப்பாடு

எழுதுகருவிகளை பெற்றுக்கொள்ளல் வழங்குதல் மற்றும் மீதிகளைத் தெளிவாகக் காட்டும் வகையில் இருப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2011 ஏப்ரல் மாதத்திற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புக்களை உரிய திகதியில் செலுத்தாமையின் அடிப்படையில் ரூபா 1,822 தொகையான தண்டப்பணத்தினை செலுத்தவேண்டி ஏற்பட்டது.

### 3.4 வாகனப் பயன்பாடு

08 ஆண்டுகளுக்கு முன்னர் கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 3,603,493 கிரயமான வாகனம் இன்று வரை நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் அந்த வாகனத்தின் ஓட்டக் குறிப்பிலும் சம்பவக்குறிப்பு புத்தகத்திலும் பதிவுகள் முழுமையற்றதாகக் காணப்பட்டன.

## 4. கணக்களிதன்மையும் சிறந்த கட்டுப்பாடும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2011 - 2015 காலத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் நிறுவனத்தில் காணப்படுகின்ற வளங்கள் தொடர்பான தகவல்கள், நிறுவனத்தின் தாபன கட்டமைப்பு, குறிக்கோள், இலக்கிடப்பட்ட திட்டங்கள் என்பவற்றுடன் நிறுவனத்தின் முகாமையாளர்களுக்கு பொறுப்புக்களை ஒப்படைக்கும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் கூட்டிணைந்த திட்டம் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள ஒவ்வொரு செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலம், ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவு என்பன காட்டப்படாதிருந்ததுடன் செயலாற்றல் அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.3 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்காததுடன் ஆண்டின் போது இடம்பெற்ற நிதி ஏற்பாட்டு மாற்றங்களுக்கு இணங்க அப்பாதீடு திருத்தம் செய்யப்பட்டிருக்கவும் இல்லை.

(ஆ) 04 மீண்டுவரும் செலவுத் தலைப்புக்கள், ஒரு மூலதன செலவுத் தலைப்பு என்பவற்றின் ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 1,299,686 தொகை அல்லது 12% செலவு செய்தமையாலும் மூலதனச் சொத்துக்களை புனரமைதல் மற்றும் மேம்படுத்தலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 800,000 தொகையான ஏற்பாடு முழுவதும் உரிய செயற்பாடுகளுக்காகச் செலவு செய்யப்படாமையினாலும்

வருமான மதிப்பீட்டினைத் தயாரித்தல் நடைமுறைச் சாத்தியமற்றிருத்தல் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.5 ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

2010 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் பொது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் பணிப்பாளரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிதிக்கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) செயலாற்றல்
(உ) திட்டமிடல்
(ஊ) நூல் நிலைய பராமரிப்பு